

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சி மன்றங்களில் மாற்றுத் திறனாளிகள் உறுப்பினராக உத்தரவிட்டதை அடுத்து திருப்பத்தூர் நகராட்சியில் நகரமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற கி.வீரமணியை அமைச்சர் எ.வ.வேலு சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம். எல். ஏ., அ. நல்லதம்பி எம். எல். ஏ., நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் சிவ.சௌந்தரவல்லி. தங்கராஜ் உள்ளிட்ட கழக முன்னோடிகள் உடன் உள்ளனர்.

### தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கு ஒருவாரம் கால நீட்டிப்பு!

# தி.மு. கழகத்தின் ஜனநாயகப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி இது!

## புதுடெல்லியில் – கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. பேட்டி!

சென்னை,டிச.2 -

**திமுக சட்டத்துறைச் செயலாளரும், மூத்த வழக்கறிஞருமான என்.ஆர். இளங்கோ எம்.பி., நேற்று முன்தினம் (30-11-2025) டெல்லியில் உள்ள தனது இல்லத்தில் தேர்தல் ஆணையம் SIR நடவடிக்கைக்கு ஒருவாரம் கால நீட்டிப்பு வழங்கியிருப்பது குறித்து செய்தியாளர்களை சந்தித்து விளக்கம் அளித்தது தொடர்பான செய்திக்குறிப்பு வருமாறு:**



தேர்தல் ஆணையம் 27-10- 2025 அன்று மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அறிமுகப்படுத்திய எஸ்.ஐ.ஆர் நடைமுறையும் அதன் கால அளவீடுகளும் நடைமுறைக்கு உவாதவை என்பதை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம் 2002 ஆம் ஆண்டிலிருந்தே இறந்துபோன வாக்காளர்கள், இரட்டைப் பதிவுள்ள வாக்காளர்கள் மற்றும் குடிமாறிச் சென்றவர்களை நீக்கி தூய்மையான வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது. எஸ்.ஐ.ஆர் நடைமுறையை நாங்கள் வரவேற்றாலும், இந்த வழிமுறைகள் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கின்றன. இவை பல வாக்காளர்களை நீக்குவதற்கும், தகுதியில்லாத வாக்காளர்களைச் சேர்ப்பதற்கும் வழி வகுக்கும் என்ற அச்சம் எழுகிறது.

மேலும் தகுதி இல்லாத வாக்காளர்களை சேர்ப்பதற்கான வழி காட்டுகிறது என்பதை எடுத்துச் சொன்னோம். அதில் முதலாவதாக காலக்கெடு என்பது மிக நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கிறது என்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருந்தோம். கழகத் தலைவர் அவருடைய வழி காட்டுதலின் பெயரில் வழக்கு உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டது, ஜனநாயக முறையில் கூட்டணி கட்சி தலைவர்கள் அனைவரும் இணைந்து அறப்போராட்டம் நடத்தினோம், இருந்தாலும் கூட களத்திலிருக்கும் எந்த ஒரு வாக்காளருடைய வாக்கும் நீக்கப்படக்கூடாது என்பதற்காக திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய பிஎல்ஏக்கள் தீவிரமாக பணியாற்றினார்கள்.

ஒவ்வொரு நாளும் தேர்தல் ஆணையர் எவ்வளவு படிவங்களை வழங்கினோம் எவ்வளவு படிவங்களை கணினி மயமாக்கினோம் என்ற ஒரு கணக்கை தந்து கொண்டே வந்தார், ஏறக்குறைய 95 சதவீதத்திற்கு மேலான படிவங்கள் வழங்கப்பட்டுவிட்டன என்று சொன்ன தேர்தல் ஆணையம் ஏறக்குறைய 75 லிருந்து 80 சதவீதம் வரை கணனி மயமாக்கப்பட்டி ருக்கிறது என்றது. ஆனால் சென்னையில் 55 சதவீதம் மட்டும்தான் கணினி மயமாக்கப்பட்டிருக்கிறது.

எத்தனை படிவங்கள் அல்லது எத்தனை சதவீத படிவ செல்வங்கள் திரும்ப பெறப்பட்டன என்ற கணக்கை தேர்தல் ஆணையம் தரவே இல்லை எவ்வளவு கொடுத்தோம் என்று சொல்கிறார்கள் எவ்வளவு கணனி மயப்படுத்தினோம் என்று சொல்கிறார்கள் எவ்வளவு திரும்ப பெற்றோம் என்பதை மட்டும் சொல்லவே இல்லை.

இதன் மூலம் பல வாக்காளர்களுடைய வாக்குகளை நீக்கி விடும் அச்சம் இருக்கிறது. மேலும் பெறப்பட்ட படிவங்களை கணினி மயமாக்குவதில் மிகுந்த காலத்தாமதம் ஏற்படுதாக நாங்கள் உணர்ந்தோம்; அதனால்தான் மீண்டும் மீண்டும் இந்த கால அட்டவணை சரியானது அல்ல என்பதை வலியுறுத்தி வந்தோம்; மேலும் பருவமழை காரணமாக இந்த பணிகள் பாதிக்கக்கூடிய வாய்ப்புகள் நிறைய இருக்கிறது என்பதையும் சுட்டி காட்டினோம்; அதற்கு ஏற்றார் போல் தற்போது வந்திருக்கக்கூடிய புயலும் அந்த பணிகளை பாதிக்க கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில் தேர்தல் ஆணையம் திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய அந்த நியாயமான வாதத்தை ஏற்று ஒரு வார காலத்திற்கு இந்த கணக்கீட்டு காலத்தை நீட்டித்திருக்கிறது அது உண்மையிலேயே திராவிட முன்னேற்ற கழகத்திற்கு அதனுடைய ஜனநாயக போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாக நாங்கள் பார்க்கிறோம்; எந்த ஒரு தமிழ்நாட்டு குடிமகனு டைய வாக்கும் விடுபட கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த பயணத்தில் முதல் வெற்றியாக ஒரு வார காலத்திற்கு இதை தள்ளி வைத்திருப்பது கொடுக்கப்பட்ட அனைத்து படிவங்களை திரும்ப பெறுவதற்கும் அவற்றை கணினி மயமாக்குவதற்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறோம். இருந்தாலும் கூட இந்த எஸ்ஐஆர் பணியில் பல சிக்கல்கள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன.

அவற்றை உச்ச நீதிம ன்றத்தில் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பீகார் தேர்தலில் அல்லது பீகார் மாநிலத்தில் நடத்தப்பட்ட எஸ்.ஐ.ஆரில் வாக்காளராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது தெரிந்தெடுக்கப்பட்டவர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர் அதை காட்டி தமிழ்நாட்டில் வாக்காளர் ஆகலாம் என்பதை 13வது ஆவணமாக நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று தேர்தல் ஆணையம் கூறியிருப்பது எந்த விதத்திலும் ஒப்புக்கொள்ளக்கூடியது அல்ல.

அதாவது அந்த வாக்காளர் பீகாரில் சாதாரணமாக வசிக்க கூடியவர் என்பதை ஜூலை மாதம் 2025 தேர்தல் ஆணையம் அறிவித்தது, அந்த வாக்காளர் நவம்பர் மாதத்தில் பீகாரில் வாக்களித்துவிட்டு அதே நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் நடத்தக் கூடிய எஸ்.ஐ.ஆரிலும் சாதாரணமாக வசிக்கக்கூடியவர் என்ற தகுதியை பெறுவார் என்பது எந்த விதத்திலும் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இல்லை. இது போன்ற பல காரணங்கள் இருக்கின்றன.


அவற்றை எடுத்துச் சொல்லி உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் 4 ஆம் தேதி எங்களுடைய வாதத்தை எடுத்து வைக்க இருக்கிறோம் என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அனிவித்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள்நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் மணிகண்டன், நிர்மல்ராஜ் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ்.கே. ராஜேந்திரன்
### டிசம்பர் 2 (1990)



தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்.

இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர்.

இராமநாதபுரம் நகர மக்களின் பேரன்பிற்கும் பெருமரியாதைக்கும் உரியவர்.

அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் கொண்டவர்.

"இரக்கமற்ற சாவே! அடுக்குமா உனக்கு" எனக் கேட்டு தலைவர் கலைஞரை கண்ணீர் விடச் செய்தது இவரது மறைவு.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# "மானமிகு ஆசிரியர்" நீடு வாழ்க!

**(திராவிடர் கழகத் தலைவர்,**
**வாழும் பெரியார், "மானமிகு ஆசிரியர்"**
**ஐயா அவர்கள்**
**2.12.2025 அன்று, 93 வது வயதில்**
**அடியெடுத்து வைக்கின்றார்.)**



" **மு**டியும்வரை கடமைகளைச் செய்வேன்!" என்றே
முழுவீச்சில் இறங்குகின்றார்! மூச்சு நின்று
"மடியும்வரை ஓய்வில்லை பணியில்!" என்றே
மானமிகு ஆசிரியர் முழங்கு கின்றார்!
"இடியும்வரை, ஆதிக்கத் தடைச்சு வர்கள்
இல்லாமல் போகும்வரை, எனது தாய்மண்
விடியும்வரை என்தொண்டு தொடரும்!" என்றே
விடுத்தார்!போர்ப் பிரகடன அறிக்கை நன்றே!

போகிறது காலநதி புதுவே கத்தில்!
பொறுப்பேற்றுக் கருஞ்சட்டைப் படைந டத்தி
ஆகிறது மூத்தமுதிர் வயதென் றாலும்
அழகுகுன்றா இளமையுடன் சுழலு கின்றார்!
சாகிறது சனாதனநோய்க் கிருமி யெல்லாம்!
சமர்புரியும் "ஆசிரியர்" சக்தி கண்டே
வேகிறது வெறிப்பகைவர் நெஞ்ச மெல்லாம்!
"வீரமணி" ஒலிக்கிறதே தமிழ்நா டெங்கும்!

நெற்றிக்கண் பழமைகளை ஞானக் கண்ணின்
நெருப்பாலே சுட்டெரித்தார் பெரியார்! அந்த
வற்றாத பகுத்தறிவுக் கனலை ஏந்தி
வலம்வரும்நம் "ஆசிரியர்" எட்டுத் திக்கும்
சுற்றித்தன் பரப்புரையை நிகழ்த்து கின்றார்!
சுயமரியா தைப்பயணம் நடத்து கின்றார்!
வெற்றிக்கு மறுதொடக்கம்! சமூக நீதி
விடுதலைக்குப் பூபாளம் அவர்மு ழக்கம்!

வளமார்ந்த கருத்துக்கள்! தெளிந்த சொற்கள்!
வாதத்தில் அனல்கக்கும் ஆதா ரங்கள்!
உளமார்ந்த கொள்கையைஉள் வாங்கிக் கொண்டே
உலாவரும் "தாடியில்லாப் பெரியார்" இன்றும்
களமாடி வருகின்றார் உரிமைப் போரில்!
கலைஞர்வழி நடைபோடும் நல்லாட் சிக்கோர்
இளம்வீரன் தினவைப்போல் தோள்கொ டுத்தே
"இனமானத் தளபதி"க்குத் துணைநிற் கின்றார்!

பட்டுமலர் விரிப்பல்ல! கடந்து வந்த
பாதையெங்கும் விஷமுட்கள்! வசைக்கூச் சல்கள்!
அட்டணக்கால் இருக்கைதரும் வரவேற் பல்ல!
அழுகியவீண் முட்டையுடன் அமில வீச்சு!
விட்டொதுங்கிப் போகவில்லை எதிர்ப்பைக் கண்டே!
"வெண்தாடிச் சூரியனின்" படையில், உச்சம்
தொட்டு,அகவைத் "தொண்ணூற்றி மூன்றும் " தொட்டார்!
" தொண்டுசெய்து பழுத்தபழம்" இவரும் ஆனார்!

எண்ணத்தை நிறைவேற்றிப் பெரியார் கண்ட
இயக்கத்தின் வழிகாட்டி அரைநூற் றாண்டாய்!
விண்முட்ட இனமானம் எதிரொ லிக்கும்
"விடுதலைக்கே" ஆசிரியர் அறுப தாண்டாய்!
கண்மூடி வழக்கத்தைத் தகர்த்துப் போடும்
கருத்தியற் கோட்பாட்டில் எண்ப தாண்டாய்!
நுண்ணோக்கும் அறிவாளர்! தொண்ணூ றென்ன?
நூறாண்டும் இவர்திகழ்வார் இளைஞ ராக!

கடலூரி லேபிறந்து, தமிழி னத்தின்
காவலராய் "திடலூரில்" எழுந்த கோமான்!
உடலேற்றுக் கொள்ளாத மூப்பென் றாலும்
ஓய்வுக்கே ஓய்வுதரும் உழைப்புச் செம்மல்!
அடலேறு சலியாத வினைத்திட் பத்தில்!
அஞ்சாத சினவேங்கை அறச்சீற் றத்தில்!
வடலூரின் அடுப்பைப்போல் சுடர்குன் றாமல்
வளர்ந்துவரும் கொள்கைத்தீ! வாழ்க! வாழ்க!

பாழடைந்த தமிழ்நாட்டைப் புதுப்பிக் கின்ற
பணியில்நம் "முதல்வருடன்" கைகள் கோர்த்துத்
தோழமையின் ஆளுமையை வழங்கி வாழ்க!
துள்ளலுடன் துடிப்புடனே இயங்கி வாழ்க!
வாழ்க!எங்கள் "ஆசிரியர்" நீடு வாழ்க!
வருங்காலப் பொன்னேட்டு வரலாற் றுக்குத்
தாழ்திறந்த பெருமகனார் இனிது வாழ்க!
தாய்க்கழகப் பெருமையுடன் தமிழ்போல் வாழ்க!!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**

### கழக அயலக அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு –

# குவைத்தில் 100க்கு மேற்பட்டோர் குருதிக்கொடை வழங்கினர்!

## சிதம்பரம் ந.தியாகராஜன் ஏற்பாடு, தானிப்பாடி சே.அஷ்ரப் அலி தலைமையில் தொழிலதிபர் எஸ்.எம்.ஹைதர் அலி தொடங்கி வைத்தார்!

குவைத், டிச. 2 -

குவைத் நாட்டில், தி.மு.க., அயலக அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் இரத்ததான முகாம் மிக சிறப்பாக நடைபெற்றது.

குவைத் நாட்டில் கழக அயலக அணி சார்பில் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக இந்த ஆண்டு கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா மு.எம்.பி. ஆகியோர்களின் வழிகாட்டுதலின் படி இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்நிகழ்வில் 100க்கு மேற்பட்டோர் குருதிக்கொடை வழங்கினர் முகாமை தொழிலதிபரும் எம்.ஏ.ஹைதர் குரூப் நிறுவனருமான முனைவர், ஹாஜி, எஸ்.எம்.ஹைதர் அலி அவர்கள் துவங்கி வைத்தார்.

தாயகத்திலிருந்து அயலக அணியின் தலைவர், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் கலாநிதி வீராசாமிஎம்.பி, அணியின் செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா மு.எம்.பி, அயலக அணியின் துணைச்செயலாளர்கள் விஜயன் ராமகிருஷ்ணன் எம்.சி, பரிதிஇளம்சுருதி எம்.சி ஆகியோர் காணொளி மூலம் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில் 2026 ஆம் ஆண்டுக்கான தி.மு.க., அயலக அணி, குவைத் நாள்காட்டி வெளியிடப்பட்டது

இந்நிகழ்வை அயலக அணியின் குவைத் அமைப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஏற்பாடு செய்திருந்தார்,




நிகழ்ச்சிக்கு அமைப்பின் தொண்டரணி செயலாளர் தானிப்பாடி சே.அஷ்ரப்அலி தலைமை ஏற்றார்,

அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு பொருளாளர் புதுவை அ.அறிவுமணி, இணைச் செயலாளர்கள் ஆயங்குடி சையது முஸ்தபா, குடந்தை சி.தியாகராஜன், சேகரை வெ.செல்லதுரை, துணைச் செயலாளர்கள் திருவாரூர் ச.குமார், முத்துப்பேட்டை ம.சபரிவாசன், உளுந்தூர்பேட்டை மு.நஜீர்அகமது, விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், மருதூர் ம.பிரேம்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் இளைஞரணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்காரியா, இளைஞரணி துணைச் செயலாளர்கள் குடந்தை த.மணிகண்டன், லட்சுமாங்குடி பி.ஆர். பழனி, இராதாபுரம் அஜிஜுல்லா, விழுப்புரம் எஸ்.அம்ஜத்கான், மகளிரணி செயலாளர் தஞ்சை சாந்தி பால சுப்பிரமணியன், மகளிர் அணி துணைச் செயலாளர்கள் மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, கோவை ரம்லத் பானு சையத், திருவாரூர் கனிமொழி கார்த்திகேயன், அரியலூர் சௌமியா பாஸ்கரன், தானிப்பாடி சுல்தானா (எ) ஜெ.ஒசூரா, தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஜ.ஜானவாஸ், தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர்கள் கள்ளக்குறிச்சி மதியழகன் புதுக்கோட்டை அசாருதீன், ராமநாதபுரம் முகமது பைசான் அலி, திருபுவனம் ஹ.மைதீன்பாட்ஷா, சிறுதொண்டமா தேவி எஸ்.ஜெயவேலன், தொண்டரணி துணைச் செயலாளர்கள் விழுப்புரம் பா.அய்யனார், கொள்ளிடம் காவேரி செல்வன், உடையார்பாளையம் எஸ்..செந்தில்குமார், புதுவயல் ச.செல்வம், பண்ருட்டி ஓ.பி.எஸ்.சிவராமன், பொறியாளர் அணி செயலாளர் திருக்கோவிலூர் அ.பொன்முடி, பொறியாளர் அணி துணை செயலாளர்கள் அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், அரியலூர் எஸ்.பாஸ்கரன், கன்னியாகுமரி ராஜேஷ், தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தாநல்லூர் ஏ.சாகுல் ஹமீது, தொழிலாளர் அணி துணைச் செயலாளர்கள் கன்னியாகுமரி ஜோசப் எடிசன், பரங்கிப்பேட்டை முகமது ஹுசைன், கொரடாச்சேரி காளிமுத்து, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் கோட்டை பி. மோதிலால், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்கள் ஆத்தூர் ஜான் பாட்ஷா, மங்கலம்பேட்டை எம்.அப்துல் முஜீர், தியாகதுருகம் பி.காதர், ஓட்டுனர் நல அணி செயலாளர் லக்ஷ்மாங்குடி சசிகுமார், ஓட்டுனர் நலஅணி துணை செயலாளர்கள் பரமக்குடி பி. மோகன், திருவாரூர் திருவரங்கன், விருத்தாசலம் ஜே.முபாரக், நெல்லை வில்சன், சுற்றுச்சூழல் அணி செயலாளர் தக்கலை ஜோசப் பெர்லின், சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர்கள் உளுந்தூர் பேட்டை சுப்பிரமணியன், குடந்தை ஆர்.முருகன், வடமாமந்தூர் தக்கா பா.நசீர், கள்ளக்குறிச்சி பெ.சின்னசாமி மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் என கழக உடன்பிறப்புகளும், தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும், தமிழ் சமூகத்தினரும் பெருமளவில் கலந்து கொண்டு 100க்கும் மேற்பட்டோர் இரத்த தானம் வழங்கி நிகழ்ச்சியை சிறப்பித்தனர். அனைவருக்கும் மதிய உணவு தி.மு.க அயலக அணியின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இறுதியாக அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ். முகமது ரஃபீக் நன்றி கூறினார்.